DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.360/2021**

| | | | |
|---|---|---|---|
| Name | : | பாபு | **Pw2** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of January 2023.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பில் 2வது சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

விபத்தில் இறந்த நபர் என்னுடைய ஊர்க்காரர். இந்த விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. யார் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்று எனக்கு தெரியாது. இன்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. விபத்தில் இறந்த நபர் தான் அதிவேகமாக சென்று விபத்தை ஏற்படுத்தியதாக அவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்தில் இறந்த நபர் தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று

விபத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்றால் சரியல்ல. இறந்த நபர் ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்பதால் இறந்த நபரின் குடும்பத்திற்கு அதிக நஷ்ட ஈடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் விபத்தை நேரில் பார்த்திருந்தால் குற்றப்பத்திரிக்கையில் சாட்சிப்பட்டியலில் என்னை சாட்சியாக சேர்த்திருப்பார்கள் என்றால் சரியல்ல. உண்மைக்குப் புறம்பாக நான் சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.01.04 17:49:30 +0530